டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 6.12.2025 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 139 - Madurai | Online Edition

# மலர் சாகுபடியையும் நறுமணப் பொருட்கள் உற்பத்தியையும் மேம்படுத்த இரண்டு முதன்மைத் திட்டங்கள்

புது தில்லி, டிச.5

இந்தியாவில் மலர் சாகுபடியையும் நறுமண பொருட்கள் உற்பத்தியையும் மேம்படுத்த இந்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கழகமான சிஎஸ்ஐஆர் இரண்டு முதன்மைத் திட்டங்களை செயல்படுத்துகிறது. விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துதல், தொழில்முனைவோரை மேம் படுத்துதல், மலர் வளர்ப்புத் துறையை வலுப்படுத்துதல் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் சிஎஸ்ஐஆர்-ன் மலர் சாகுபடித் திட்டம் தொடங்கப்பட்டது. தற்போது, இந்த திட்டம் இரண்டாம் கட்டத்தில் உள்ளது. மலர் பயிர்களை பயிரிடுவதன் மூலம் 32,44,000 மனித நாட்கள் வேலை உருவாக்கப்படுகிறது. இந்த பணியின் மூலம் 2,208.63 ஹெக்டேர் பரப்பளவில் மலர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது நாட்டின் 26 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 126 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் குறிப்பிடத்தக்க சமூக-பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கூடுதலாக, 17 தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு தொழில்முனைவோருக்கு வழங்கப்பட்டுள்ளன.

2017-ம் ஆண்டில் மலர் வளர்ப்பு பணிக்கு முன்னதாக தொடங்கப்பட்ட முதன்மைத் திட்டம் சிஎஸ்ஐஆர்-ன் நறுமணப் பொருட்கள் திட்டம். நறுமணப் பயிர்களின் சாகுபடி, பதப் படுத் துதல் மற்றும் மதிப்பு கூட்டுதல் மூலம் கிராமப்புற மேம்பாட்டை ஊக்குவிப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் மத்திய அறிவியல், தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் ஜிதேந்திரசிங் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

# உலக மண்வள தின விழிப்புணர்வு நிகழ்ச்சி



தூத்துக்குடி, டிச.5

உலக மண்வள தினத்தை முன்னிட்டு ஆரோக்கியமான நகரங்களுக்கு ஆரோக்கியமான மண் என்ற தலைப்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி 5.12.25 அன்று தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது.

நீர்வளச் சூழலியல் மேலாண்மை துறையின் உதவி பேராசிரியர் மற்றும் துறை தலைவர் (பொ) முனைவர் து.மணிமேகலை தனது வரவேற்புரையில் மண்வள பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இக்கல்லூரியின் முதல்வர் (பொ) முனைவர் சா.ஆதித்தன் மண் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வழிமுறைகளை எடுத்துரைத்தார். மண் தினத்தின் முக்கியத்துவத்தை முன்னிறுத்தும் வகையில், மண் பாதுகாப்பில் இளைஞர்களின் பங்கு என்ற தலைப்பில் பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது. மேலும் ஆங்கிலக் கட்டுரை போட்டி, தமிழ் கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டியும் நடத்தப்பட்டது.

முனைவர் அ.ஜுலியட் செல்வராணி, உதவி பேராசிரியர் நன்றியுரை வழங்கினார். மேலும், ஸ்ரீ. சக்தி, உதவி பேராசிரியரால் நிகழ்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது. இறுதியில் வெற்றியாளர்களுக்கு சான்றிதல் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது.

இத்தகலை, தூத்துக்குடி, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் (பொ) தெரிவித்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோயம்புத்தூர், டிச.5

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி இம்மாதத்திற்கான பயிற்சி, 8.12.25 (திங்கட்கிழமை) அன்று அளிக்கப்படும்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

- தேனீ இனங்களை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்

பயிற்சியில் கலந்து கொள்ளவிழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நேரம் : காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422 - 6611214, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# நாளந்தா வேளாண்மைக் கல்லூரியில் உலக மண் தினப் பேரணி




திருச்சி, டிச.5

திருச்சி எம்.ஆர்.பாளையத்தில் உள்ள நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் பயிர் மேலாண்மைத் துறை சார்பில் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல்) 5.12.25 அன்று காலை 10.00 மணிக்கு உலக மண் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டது. இந்த ஆண்டின் உலகமண் தின மையக்கரு "Healthy Soils for Healthy Cities" (உறுதியான நகரங்களுக்கு உறுதியான மண்) பேரணியில் சிறப்பாக வலியுறுத்தப்பட்டது. இந்த நிகழ்வு உதவிப்பேராசிரியர்கள் ப.நந்தகுமார், தே.விக்னேஷ் ஆகியோரால் ஒருங்கிணைக் கப்பட்டு, துறைத் தலைவர் முனைவர் சி.ராஜேஷ், ஆதரவுடன் நடைபெற்றது. பேரணியை கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ.வெங்கட பிரபு, காலை 10.00 மணிக்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார். கல்லூரி தலைவர் அல்லி இங்கர்சோல் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். நாட்டு நல பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் லு.கண்ணன் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா.மகாலட்சுமி, மாணவர்கள், கல்லூரி பேராசிரியர்கள் உற்சாகமாக பங்கேற்று, மண் பாதுகாப்பு, உர பயன்பாடு, இயற்கை விவசாயம், உயிரியல் பல்வகைத் தன்மை பாதுகாப்பு மற்றும் ஆரோக்கிய மான நகரங்களை உருவாக்கும் மண் ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் போன்றவற்றை விளக்கும் விதமாக பதாகைகள் மற்றும் கோங்களுடன் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். பேரணி யின் நோக்கம் மண் வளத்தைப் பாதுகாப்பது மற்றும் நிலை யான வேளாண் முறைகளை ஊக்குவிப்பதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர். இளைஞர்கள் இயற்கை வளங்களைப் பாதுகாப் பதில் ஆற்றும் முக்கிய பங்கையும் அவர்கள் வலியுறுத்தினர். உலக மண் தினப் பேரணி வெற்றிகரமாக நிறைவடைந்து, மண் பராமரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு குறித்த வலிமையான செய்தியை பொதுமக்களிடம் பரப்பினர்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily





**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# இனத்தூய்மை தரமான விதைக்கு பேராயுதம்

இராமநாதபுரம், டிச.5

இராமநாதபுரம் விதை ஆய்வு துணை இயக்குநர் ம.இப்ராம்சா வெளியிட்டுள்ள அறிக்கையில் விதையின் இனத்தூய்மை பேணுவது குறித்து தெரிவித்துள்ளார்.

இனத்தூய்மை விதைகள் என்பது ஒரு குறிப்பிட்ட பயிருடைய இரகங்களின் மரபணு குணங்களை ஒத்த, கலப்படம் இல்லாத தரமான விதைகளைக் குறிக்கிறது. இது விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையால் உறுதி செய்யப் படுகிறது. விவசாயத்திற்கு தற்போது கிடைக்கும் விதைகள் நவீன இரகங்கள் அல்லது பாரம்பரிய இரகங்களின் விதைகளாகும்.

பல இரகங்களின் விதைகள் கலந்துவிட்டால் அறுவடை, பின்செய் நேர்த்தியில் இடர்பாடுகள் மற்றும் குறைவான மகசூல் ஏற்படும். இந்திய விதைக்குழு ஒவ்வொரு பயிரின் இரகங்களில் எவ்வளவு இனத்தூய்மை இருக்க வேண்டும் என தீர்மானித்து உள்ளது. பொதுவாக சான்றளிக்கப்பட்ட விதை இரகங்களுக்கு 98% மற்றும் வீரிய ஒட்டு இரகங்களுக்கு 95% இனத்தூய்மை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதிகளவு இனத்தூய்மை இருந்தால் நிறைவான மகசூல் பெற பேராயுதமாக இருக்கும். இனத் தூய்மையில் குறைபாடு பல்வேறு காரணிகளால் ஏற்படுகின்றது.

உதாரணமாக இயற்கையாக கலப்பினமாகுதல், மற்ற இரக விதைகள் மற்றும் களைகளின் விதைகள் கலந்து விடுதல், பயிர் வளர்ச்சி மற்றும் மரபணுவில் ஏற்படும் மாற்றங்கள் இக்குறை பாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பான தொழில்நுட்பங்களை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறை கண்காணித்து செயல்படுத்துகின்றது.

இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களிலிருந்து அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களிலிருந்து பயிர் இரகங்களின் இனத்தூய்மையினை அறிந்திட 2020-21-ல் 25, 2021-22-ல் 67, 2022-23-ல் 90, 2023-24-ல் 100, 2024-25-ல் 102, 2025-26 (நவம்பர் வரை) 32 விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு கோயம்புத்தூர் விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# உலக மண் தின விழாவை முன்னிட்டு கட்டுரை மற்றும் கோல ஓவிய போட்டிகள் நடத்தப்பட்டன



மதுரை, டிச.5

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மண் மற்றும் சுற்றுச் சூழல் துறையின் சார்பாக, உலக மண் தின விழா டிசம்பர் 5 ஆம் தேதி வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது. மக்களின் விழிப்புணர்ச்சிக்காக, கல்லூரி வளாகத்தில் பல்வேறு போட்டிகளான கட்டுரைப் போட்டி மற்றும் வண்ணக்கோல ஓவிய போட்டிகள் மிக சிறப்பாக நடத்தப்பட்டன. கல்லூரி முதல்வர் (பொறுப்பு) முனைவர் ஐ.யேசுராஜு, உலக மண் தின விழாவின் முக்கியத்துவம் மற்றும் மண்ணின் வளம் பெருகும் உயிர்களையும் அதன் முறைகள் குறித்து சிறப்புரையாற்றினார். மண் மற்றும் சுற்றுச்சூழல் துறைத் தலைவர், முனைவர் பி.கிறிஸ்டி நிர்மலா மேரி, ஆரோக்கியமான நகரங்களுக்கு ஆரோக்கியமான மண் பற்றி மாணவ மாணவிகளுக்கும் எடுத்துரைத்தார். துறை பேராசிரியர்கள் முனைவர் பா.சரவணபாண்டியன் மற்றும் சா.ஷிபா, மண் முக்கியத்துவமும் அதை காக்கும் முறைகளையும் ஆரோக்கிய மான நகர மண்களை செழிப்பாக மாற்றும் உத்திகளை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

விழாவில் கலந்து கொண்ட முதலாம் ஆண்டு பயிலும் வேளாண் மாணவ மாணவிகளான, நிவேதா, பரணி, சாதனாகுமாரி மற்றும் சந்திர பிரகாஷ் உலக மண் தினத்தினை குறித்து கட்டுரை மற்றும் கவிதை வாசித்தார்கள். இவ்விழாவின் முடிவில் உதவி ஆசிரியர் இரா.முருகராகவன் மண் தின விழாவின் சிறப்பை மிக சிறப்பாக கூறி நன்றியுரை ஆற்றினார்.




# கிசான் கோஸ்திஷ் – விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி



சிவகங்கை, டிச.5

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி வட்டாரத்தில் வேளாண் மைத் துறை கீழ் (அட்மா) மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறு துணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் கிசான் கோஸ்திஷ் – விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி கண்ணங்குடி கிராமத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கண்ணங்குடி வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தங்கபாண்டியன், தலைமையேற்று வேளாண்மைத் துறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்கள் பற்றியும், திட்டங்களின் பயன் பாடுகள், வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

வேளாண்மை அலுவலர் சிவபிரிய தர்ஷினி விவசாயிகளின் நில உடைமைகள் பதிவு, உழவன் செயலி மற்றும் முதலமைச் சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் இயற்கை பூச்சி விரட்டிகளான ஆடா தொடா, நொச்சி வேப்ப மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என கூறினார்.

தோட்டக்கலைத் துறை உதவி தோட்டக்கலை அலுவலர் ஜீவிதா கூறியதாவது, பண்ணைக் குட்டை அமைத்தல், பழச்செடி மற்றும் காய்கறி விதைத்தொகுப்பு திட்டம், பிற திட்டங்களைப் பற்றி எடுத்துரைத்தார். கால்நடை பாரமரிப்புத் துறை ஆய்வாளர் கலைவாணி கால்நடைகளுக்கு ஏற்படும் நோய் கட்டுப்படுத்தும் முறை பற்றி எடுத்து கூறினார்.

வேளாண்மை பயிற்றுநர் சீனிவாசன் மண் மாதிரி சேகரித்தல் மண் பரிசோதனை மற்றும் சமச்சீர் உரமிடல் மற்றும் இரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைத்தல் குறித்த தொழில் நுட்பங் களான அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த முறையில் சமச்சீர் உரமிடல் பற்றியும் இயற்கையான முறையில் பயிர் களுக்கு எவ்வாறு உரமிடுதல் பற்றி எடுத்து கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் செலின் வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறையில் உள்ள திட்டங்களை விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார்.

இவ்விழாவில் அட்மா திட்டப் பணியாளர்கள் சூர்யா, சதீஸ்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆரோக்கிய அந்தோணி, நவநீதகிருஷ்ணன், மாரிமுத்து, பிரேமலதா, மதுபாலன் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை முறைகளை செயல்விளக்கங்களாக செய்து காண்பித்தனர். மேலும் இந்நிகழ்ச்சியில் அனைத்து துறை அலுவலர் மூலம் கண்காட்சி அமைக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து விவசாயி களுக்கும் மதிய உணவு மற்றும் பூச்சி நோய் விழிப்புணர்வு வழிகாட்டி வழங்கப்பட்டது.

இப்பயிற்சியின் இறுதியில் வேளாண் திட்ட பிரசார பேரணி நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# வெண்ணாவல்குடியில் உலக மண் தினம் கொண்டாட்டம்

புதுக்கோட்டை, டிச.5

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டாரம், வெண்ணா வல்குடி கிராமத்தில் உலக மண் தினம் 5.12.25 அன்று கொண்டாடப்பட்டது.



இவ்விழாவிற்கு முனைவர் ஜெ.பாலமுருகன், தொழில்நுட்ப வல்லுநர் (மண்ணியல்) துவக்க வரவேற்புரை ஆற்றினார். அவருடைய உரையில் மண் அரிமானம் பற்றியும் அதை தவிர்க்கும் முறை பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார். பிறகு முனைவர் ஆ.அழகேசன், தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்) சிறப்புரையில் மண் உருவாக 500லிருந்து 1000 வருடங்கள் எடுத்து கொள்ளும் என்று கூறினார். பின்னர் முனைவர் ப.கார்த்திகேயன், தொழில்நுட்ப வல்லுநர் (நுண்ணு யிரியல்) சிறப்புரையில் மண்ணில் உள்ள நுண்ணுயிரிகளும் மற்றும் அவற்றின் பயனும் மண்ணில் பெருக்க வழிமுறைகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார். மேலும் திட்ட ஒருங்கிணைப் பாளர் முனைவர் சுபமாரிமுத்து, தனது தலைமையுரையில் மண்ணை

பேணிக் காப்பதின் வழிமுறைகள் மற்றும் மண் வளத்தால் பயிர் மகசூலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியின் இறுதியாக முனைவர் ம.தமிழ்ச்செல்வன், தொழில்நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை), மண்வளம் மற்றும் தோட்டக்கலை பற்றி விளக்கமாக கூறி நன்றி நவிழ்ந்தார். இந்நிகழ்ச்சியில் முனைவர் ஜெ.பாலமுருகன் மற்றும் பி.கருப்பசாமி, திட்ட உதவியாளர் (தொழில் நுட்பம்) மண் மாதிரி எடுத்தல் மற்றும் பகுப்பு செய்தல் பற்றி உழவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மொத்தமாக 23 உழவர் பெருந்தகையோர்கள் பங்கேற்று பயனடைந்தார்கள்.



# மண்ணின்றி உயிர் இல்லை - மண்வள மேம்பாட்டிற்கு என்ன செய்ய வேண்டும்?



நம்முடைய பூமியில் இருக்க கூடிய பொருட்களில் விலை மதிப்பற்ற பொருளாக பார்க்கப்படுவது மண் தான். அத்தகைய மண்ணை எப்படி பாதுகாக்க வேண்டும். இன்றைய சூழலில் முன்னோர்கள் காலத்தில் அள்ளி அள்ளிக் கொடுத்த (விளைச்சலை) மண் இன்றி கிள்ளி கிள்ளி கொடுக்கிறது. இதற்கு யார் காரணம் நாம் தான்.

**மண்ணின் அருமை பெருமைகள்?**

மண்ணிலிருந்து எந்த பொருள் விண் நோக்கி (மேலே) சென்றாலும் அது மண் நோக்கியே திரும்பி வரும். ஆனால் விதைக்கின்ற எந்த ஒரு விதையானாலும் அது மட்டும் விண் நோக்கி (மேல் நோக்கி) வளரும் என்றால் மண்ணின் மகிமை என்ன வென்று சொல்லுவது. ஏனெனில் யார் என்ன செய்தாலும், அதை உள் வாங்கிக் கொண்டு செரித்து கொண்டே இருக்கும். மண்ணை பாதுகாப்பது நம்முடைய கடமை. அது அமைதியாக இருக்கிறது என்பதற்காகவே நாம் மண்ணை மாசுபடுத்திக் கொண்டிருக்கிறோம். இதனால் மண்ணில் வாழும் நுண்ணுயிர்கள் முதல் புல், பூண்டு முதல் பெரிய உயிரினங்களுக்கு பேராபத்து என்பதை நாம் உணரும் தறுவாயில் இன்று இருக்கிறோம்.

நேற்றைய தினத்தில் 5.11.25 உலகமெங்கும் 'உலக மண் விழா' கொண்டாடப்பட்டது. இதனை 2002ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கபட்டு வருகிறது என்பது நாம் அறிந்ததே.

**மண் எப்படி உருவாகிறது தெரியுமா?**

பாறைகள், மழை, காற்று வெள்ளத்தால் உருமாறி மண்ணாக மாறுகிறது. மண்ணாக மாறிய பின் அதனுடைய தன்மை பௌதீக, இராசயன உயிரியல் மாற்றாங்களால் மாறுபடுகிறது. ஒரு அங்குலம் மண் உருவாக 500 ஆண்டுகள் ஆவதாக கணிக்கப்பட்டுள்ளது.

**மண்ணில் என்னென்ன உள்ளது தெரியுமா?**

ஒரு செ.மீ அளவுள்ள மண்ணில் 45% கரிம சத்துகளும், 25% நீரும், 25% காற்றும், 5% நுண்ணுயிர்களும் நிறைந்துள்ளன. ஒரு கிராம் மண்ணில் 5-7ஆயிரம் வரை பாக்டிரியாக்களும், ஒரு எக்கர் மண்ணில் 5-10 டன் வரையிலும் எண்ணிக்கையில் பல்வேறு வகையான உயிர்களும் வாழ்கின்றன என்றால் மிகை யல்ல. தாவரங்களுக்கு தேவையான 16 சத்துகள் நேரடியாக தந்து விளைச்சலை அதிகரிக்கிறது.

**உலக மண் தின 2025யின் கருப்பொருள் என்ன தெரியுமா?**

இந்தாண்டின் கருப்பொருள் (THEME'S - HEALTHY SOIL FOR HEALTHY CITIES) ஆரோக்கியமான நகரும் ஆரோக்கியமான மண்ணும்'

**மண்வளத்தை மேம்படுத்த நாம் என்ன செய்யவேண்டும்?**

1) அளவுக்கதிகமான உரங்களை இடக்கூடாது. மண் பரிசோதனை அடிப்படையில் தான் உரமிட வேண்டும்.

2) கண்ட கண்ட களைக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தக் கூடாது.

3) மண்ணில் எங்கு பார்த்தாலும் வெள்ளேவெளர் என பாலித்தின் பைகள் தான் அதிகமாக கிடக்கிறது. அது எளிதில் மக்காது, அவற்றை சேகரித்து மறு சுழற்சிக்கு அனுப்ப வேண்டும்.

4) பயிர்கழிவுகளை தீயிட்டு எரிக்கக்கூடாது. அவற்றை ரோட்டோ வோடர் கொண்டு மடக்கி உழது மண்ணுடன் கலந்தால் எளிய உரமாக மாறிவிடும்,

5) நிலங்களை தரிசாக போடாமல் எதாவது சாகுபடி செய்ய வேண்டும், இதனால் மண்ணில் சூரிய வெப்பம் படுவது தடைபடும்.

6) மண்வளத்தையும் விவசாய வருமானத்தை பெருக்கவும் வரப்பு ஓரங்கள் வாய்க்கால் ஓரங்களில் பயனுள்ள மரக்கன்று களை நடவேண்டும்.

7) மண்ணில் நுண்ணுயிர் பெருக்கத்தை அதிகரிக்க ஆட்டு கிடை, மாட்டு கிடை அமர்த்த வேண்டும்.

8) மலடான மண்ணை வளப்படுத்த பல தானிய பயிர் விதைக்க வேண்டும்.

9) மண் அரிமானத்தை தடுக்க (றீநுணூஸி சியூபுவீணூநுஹி) வரப்புகளை உயர்த்துதல்.

10) வாய்ப்புள்ள இடங்களில் பண்ணை குட்டைகள் அமைக்க வேண்டும்.

இதுபோன்ற செயலை செய்தாலே மண் வளப்படும் என இந்த நாளில் உறுதி கொள்ளுவோம். தாய் மண்ணை காப்போம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா மூலம் விவசாயிகள் இலவச விபத்துக் காப்பீடு



ஈரோடு, டிச.5


இந்தியாவின் முதன்மை கூட்டுறவு உர நிறுவனமான இப்கோ நிறுவனம் கடந்த 2022 ஆம் ஆண்டு விவசாயிகள் வழக்கமாக பயன்படுத்தும் குருணை யூரியா மூட்டை மற்றும் டி.ஏ.பிக்கு மாற்றாக அதே அளவு பயனளிக்கும் திறன் கொண்ட நானோ யூரியா மற்றும் நானோ டி.ஏ.பி உரங்களை அறிமுகப்படுத்தியது.

இந்த புதிய தலைமுறை உரங்களை ஊக்குவிப்பதற்காக, இப்கோ நிறுவனம் சங்கட ஹரன் பீமா யோஜனா என்ற பெயரில் இலவச விபத்து காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நானோ உரங்கள் வாங்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு பாட்டிலுக்கு ரூ.10,000 வீதம் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஆண்டுக்கு 20 பாட்டில்கள் வரை ரூ.2 லட்சம் விபத்து காப்பீடு கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த விவசாயி, சுப்பிரமணி, 5 நானோ யூரியா பாட்டில்களை வாங்கி வயல்களில் பயன்படுத்தி வந்தார். எதிர்பாராத விதமாக கடந்த ஜூன் 12ஆம் தேதி சாலை விபத்தின் போது அவர் உயிரிழந்தார்.

தற்போது அவரது குடும்பத்திற்கு காப்பீட்டுத் தொகையான 50 ஆயிரம் ரூபாய் இப்கோ நிறுவனத்தின் சார்பாக ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி, வேளாண் இணை இயக்குனர் கந்தராஜா மற்றும் இப்கோ கள அலுவலர் வினோத் முன்னிலையில் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள், தங்கள் அருகிலுள்ள கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கடைகளில் கிடைக்கும் நானோ உரங் களை வாங்கி பயன்படுத்துவீர்! மண்வளத்தைக் காப்பீர்!


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க பணியாளர்கள் விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம்



மதுரை, டிச.5

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 2025-26ம் ஆண்டு 5.12.25 வெள்ளிக்கிழமை அன்று வேடர் புளியங்குளம் கிராமத்தில் B12 Organization of Kisan Gosthies to Strengthen R-E-F Linkage. நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை குறித்த விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க பணி யாளர்கள் விவசாயிகளை இழப்பினை வலுப்படுத்தும் முகாம், மதுரை மாவட்டம், வேளாண்மை இணை இயக்குனர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது. நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் விதை நேர்த்தி முறைகள் குறித்து மதுரை இணை இயக்குனர், விளக்கி கூறினார். மதுரை மாவட்டம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பூச்சியியல் துறை பேராசிரியர் உஷாராணி, கலந்து கொண்டு விவசாயிகளுக்கு நெல் பயிர்களுக்கான உரப்பரிந்துறை உயிர் உர பயன்பாடு பற்றி எடுத்துக் கூறினார். வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம் வேளாண்மைத் துறை மானிய திட்டங்கள் பற்றி கூறினார். வேளாண்மை அலுவலர் அருள் நவமணி விஜய பாரதி பயிர்களுக்கு ஊட்டச்சத்து மேலாண்மை அவசியத்தை எடுத்து கூறினார். மேலும் நெல் விதை நேர்த்தி குறித்து உயிர் உர பயன் பாடு குறித்தும் செயல்விளக்கம் செய்து காட்டினார். மண் பரிசோதனை நிலையம் வேளாண்மை அலுவலர் ேஷபனா, நெல் நாற்றங்கால் முறை விதை நேர்த்தி முறை பசுந்தாள் மற்றும் பசுந்தழைகள் பயன் படுத்தும் முறைகள் மண்புழு உர பயன்பாடு ரசாயன உரங்களை குறைத்து உயிர் உரங்களை பயன் படுத்தும் முறைகள் கோணவீடர் பயன்படுத்தும் முறை குறித்து கூறினார். விவசாயிகள் மற்றும் உயர் அலுவலர்கள் அனை வரையும் வரவேற்று முடிவுரை குறித்தும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா கூறினார். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர் மற்றும் மகாலட்சுமி ஏற்பாடு செய்திருந்தார்கள்.

# வேளாண் துறை திட்ட பணிகள் குறித்து வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு



திருச்சி, டிச.5

திருச்சிராப்பள்ளி மாவட்டம், வேளாண்மை இணை இயக்குனர் பூ.வசந்தா, வேளாண்மை துறை திட்ட பணி குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக பூவாளூர் கிழக்கு பகுதியில் சம்பா நெல் சாகுபடி செய்து மழையினால் ஏதும் சேதம் ஏற்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து விவசாயிகளுக்கு நன்கு வடிகால் வசதி மற்றும் ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்சல்பேட் இட பரிந்துரை செய்தார். மேலும் கோமாக்குடி கிராமத்திலும் மழை நீரால் ஏற்பட்ட நெல் பாதிப்பு விவரம் ஆய்வு செய்தார்.

மேலும் அனுசரணை ஆராய்ச்சி திடல், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் நடப்பு சம்பா நெல் சாகுபடியில் இயந்திர முறையில் நடவு செய்துள்ள செயல்விளக்க திடல் ஆய்வு மேற்கொண்டு விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்பம் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை ஜெயராணி, லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சத்யபிரியா, வேளாண்மை அலுவலர் கௌசல்யா, உதவி வேளாண்மை அலுவலர் எடிசன், அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக் ஆகியோர் இருந்தனர்.



# விருத்தாசலம் கேவிகே சார்பில் உலக மண் தின கொண்டாட்டம்



கடலூர், டிச.5

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலத்தில், 5.12.25, உலக மண் தினவிழாவின் மகத்துவத்தை மக்களிடையே வலியுறுத்தும் வண்ணம், இயற்கை அங்கக உரங்கள், பயிர்களில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பண்ணையம், பசுந்தாள் பயிர்களான சணப்பை, தக்கைப்பூண்டு, அவுரி, நவதானிய பயிர் பயன்படுத்துதல், உயிர் உரம், இயற்கை இடுபொருட்களான மொலாசஸில் இருந்து பெறப்பட்ட பொட்டாஷ் இயற்கை உரம், பாஸ்பேட் ரிச் ஆர்கானிக் உரம், இயற்கை எரி வாயு ஆலையிலிருந்து பெறப்படும் நொதித்த அங்கக எரு, புளித்த ஆலை அழுக்கு உரம், சிட்டி கம்போஸ்ட் ஆகியவை பற்றியும், மண் பரிசோதனையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வண்ணமாக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் உர நிறுவனங்களான பேக்ட், டான்பெட், மதராஸ் உர நிறுவனம், இப்கோ, ஐ.பி.எல், எஸ்.எல்.ஆர், கோல்வின் பயோடெக் ஆகியோர் இணைந்து ‘விவசாய கருத்தரங்கு‘ நடத்தினர்.

பல்வேறு உர நிறுவனங்கள் தங்களது இயற்கை மற்றும் கனிம உரங்களை பற்றி விரிவாக எடுத்துரைத்தனர்.

திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், விழாவினை தொடங்கி வைத்து வரவேற்புரையாற்றி மண் வளம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

வேளாண்மை துணை இயக்குநர் (விதை ஆய்வு), வேளாண் உதவி இயக்குநர்கள் வெங்கடேசன் மற்றும் முகமது நிஜாம், துறை வாரியான மண்வள மேம்பாட்டு திட்டங்களையும், மண்வள அட்டையினையும் வழங்கி, சிறப்புரையாற்றினார்.

பல்வேறு உர நிறுவனங்கள் தங்கள் தொழில்நுட்ப கையேடு களையும், உரங்களையும், வேளாண்மை அறிவியல் நிலைய அரங்கத்தில் கண்காட்சி அமைத்தனர். முனைவர்கள் கண்ணன், சுகுமாறன், ஜெயக்குமார், காயத்ரி, கலைச்செல்வி ஆகியோர் தொழில்நுட்ப உரையாற்றினர். மேலும் உர நிறுவன மேலா ளர்கள், அருள்மணி, துளசிலிங்கம், சின்னப்பன், பானுசந்தரன் ஆகியோர் கலந்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியல் தென்னை மற்றும் முந்தரியில் எரு இடுதல் செயல்விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது. கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.



# பூச்சி தாக்குதலில் இருந்து விதைகளை பாதுகாக்க அறிவுறுத்தல்

கோவை, விதை விற்பனையாளர்கள், விநியோகிப்பவர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு கோவை, விதைப்பரிசோதனை நிலைய விதைப்பரிசோதனை அலுவலர் அறிவுறுத்துவது யாதெனில்,

விதை சேமிப்பில் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க பின்வரும் வழிமுறைகளை கடைபிடித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. விதைகளை அறுவடையில் நன்றாக உலர்த்தி ஈரப்பதம் 8 முதல் 10 சதவீதத்திற்குள் இருக்குமாறு செய்து சேமிக்க வேண்டும்.

2. விதைகளை சேமிக்கும் குதிர்கள் மற்றும் அறைகளை நன்றாக சுத்தம் செய்து எந்தவித பூச்சிகள் மற்றும் அதன் வாழ்க்கை பருவங்கள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. நவீன சேமிப்பு களஞ்சியங்களை உபயோகித்தல், குறிப்பாக உலோக குதிர்கள் சிறு விவசாயிகளுக்கு விதைகளை சேமித்து வைத்துக்கொள்ள சிறந்த சாதனமாக விளங்குகிறது.

4. விதை மூட்டைகளை தரையில் வைக்காது கட்டைகள் மற்றும் மூங்கில் பாய்களின் மீது அடுக்க வேண்டும்.

5. மூட்டைகள் சுவற்றை ஒட்டி இல்லாமல் தனிதனியாக, அடுக்கடுக்காக, நல்ல இடைவெளி விட்டு காற்றோட்டமாக வைக்க வேண்டும்.

6. தானியக் கதிர் அடிக்கும் களங்கள், சேமிப்பு அறைக்கு தள்ளி இருப்பதுடன், எந்தவித தூசும், மாசும் இல்லாமல் இருக்க வேண்டும்.

7. விதை சேமிப்புக்கு பயன்படுத்தப்படும் சாக்குப்பைகள் புதியதாக அல்லது பூச்சியற்றதாக இருக்க வேண்டும். பழைய சாக்குப்பைகளை மாலத்தியான் அல்லது டைகுளோர்வாஸ் 0.1 சதக் கரைசலில் நனைத்து உலர்த்திப் பின் உபயோகிக்கலாம்.

8. மூட்டைகளின் மீது மாலத்தியான் 0.1 சதம் கரைசலை மூட்டை நனையாமல் விதைகள் மேல் படாமல் அளவாக தெளித்து வரலாம்.

9. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் கண்டு பிடிக்கப்பட்டு பரிந்துரை செய்யப்படுகின்ற ஊக்குவிக்கப்பட்ட களி மண்ணை விதைகளுக்குக் குறிப்பாக பயறுவகைப் பொருட் களுடன் 1:100 என்ற விகிதத்தில் (எடைக்கு எடை) கலந்து வைப்பதால் பூச்சிகள் வராமல் காப்பாற்றலாம்.

10. பயறு வகைகளான துவரை, உளுந்து, பாசிப்பயறு முதலிய வற்றை வேப்பம் மற்றும் உணவு எண்ணெய்களுடன் கலக்கி வைப்பதன் மூலம் (1:100 எடைக்கு எடை என்ற விகிதத்தில்) பயறு வண்டு தாக்குவதை கட்டுப்படுத்தலாம். இதைத்தவிர வேப்பங் கொட்டை தூளை 1 கிலோ விதைக்கு 10 கிராம் என்றளவில் உபயோகித்து பயன் பெறலாம். விதைகளின் பைரித்திரம் வேப்பு விதை பவுடர், உலர் வேம்பின் இலை போன்றவை சேமிக்கப் படும் பொருட்களின் உற்பத்தியாகும் பூச்சி இனங்களை கொல்லக்கூடிய சக்தி வாய்ந்தவை. இவை மட்டுமின்றி தேங்காய் எண்ணெய், நல்லெண்ணை ஆகிய தாவர எண்ணெய் களையும் பயன்படுத்தலாம். இவைகளை 1:100 விகிதத்தில் (எடைக்கு எடை) உபயோகிக்கலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




# ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறை சார்பில் உலக மண்வள தின விழா

அரியலூர், டிச.5

வேளாண் பயிர்கள் சாகுபடியில் மண்வளம் பாதுகாப்பது மிக முக்கிய காரணியாகும். தேவையான அளவு உரமிடுவது சாகுபடி செலவைக் குறைப்பதுடன் மண்வளத்தையும் பாதுகாக்கிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மண்வளத்தைப் பாதுகாக்கும் நோக்கில் ஆண்டுதோறும் டிசம்பர் 5ம் தேதி உலக மண்வள தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறை சார்பில் மண்வள தின விழா சூரியமணல் கிராமத்தில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) மகேந்திரவர்மன் தலைமை வகித்தார். அரியலூர் மண் பரிசோதனை நிலைய மூத்த வேளாண் அலுவலர் ஆதிகேசவன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு மண் ஆய்வின் முக்கியத்துவம், மண் ஆய்வு பரிந்துரைப்படி உரமிடுவதால் ஏற்படும் நன்மைகள், குறித்து விளக்கினார். மேலும் விவசாயிகள் தங்களது நிலம் குறித்த விபரங்களைத் தெரிந்து கொள்ள உதவும் தமிழ் நிலம் இணைய தளம் குறித்து விளக்கி பதிவிறக்கம் செய்யும் முறை குறித்து விளக்கினார். உதவி வேளாண் அலுவலர்கள் மேனகா மற்றும் கனகராஜ் ஆகியோர் மண் மாதிரி எடுக்கும் முறை குறித்து விளக்கி மண்வள அட்டை பயன்பாடு குறித்து விளக்கினர். விவசாயிகளுக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டு உரப் பரிந்துரை குறித்து விளக்கப்பட்டது. அட்மா திட்ட வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி நன்றி கூறினார். சூரியமணல் கிராம விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டனர்.




# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உலக மண் வள நாள் நிகழ்வு

சேலம், டிச.5

மண்ணின் தன்மைக்கேற்பவும் அதிலுள்ள ஊட்டச்சத்துகளின் விகிதத்திற்கு ஏற்பவும் சரியான அளவில் ஊட்டச்சத்துக்களை பரிந்துரைக்கவும், அதிகளவு இரசாயன உரங்களின் பயன் பாட்டை குறைக்கவும், சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைத்து நல்ல தரமான நிலத்தை உருவாக்கவும், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உலக மண்வள நாள் சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம், கடத்தூர் அக்ரஹாரம் கிராமத்தில் நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி தலைமை தாங்கி, மண் வளத்தை பாதுகாக்க மண் புழு, தொழு உரம், பசுந்தாள் உரம், மக்கும் உரங்கள் இட்டு மண் வளத்தை பாதுகாக்க வேண்டும் என்று எடுத்து கூறினார். சேலம் மண் பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் ராதாருக்மணி, மண் மாதிரி எடுக்கும் வழிமுறைகள், பயிருக்கு தேவைப்படும் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்டம் பற்றி விளக்கம் அளித்தார். விவசாயிகளுக்கு மண் மாதிரி எடுக்கும் வழிமுறைகள் குறித்த செயல்விளக்கம் செய்து காண்பிக்கப் பட்டது. இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் த.நிவேதா ஸ்ரீ மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.



# நெல் வெண் நுனி இலை நூற்புழு - ஒரு பார்வை

### தாக்குதலின் அறிகுறிகள்

● நெல் விதைகளில் உறக்க நிலையில் இருக்கும், இந்நூற்புழுக்கள் விதைத்த பின்பு முளை விட்டு வளரும் பயிருடன் சேர்ந்து நகர்ந்து கொண்டே இலை நுனியினை அடைகின்றன.

● பாதிக்கப்பட்ட பயிர்களின் இலை நுனிகள் மஞ்சள் நிறமடைந்து பின்பு காய்ந்து சாட்டை போன்று சுருண்டு காணப்படும்.

● வளர்ந்த பயிர்களில் நூற்புழு பாதிப்பினால் கண்ணாடி இலை/பூட்டை இலை என்று சொல்லக்கூடிய இலை சுருண்டு விடுவதால் அதிலிருந்து வெளிப்பட வேண்டிய கதிர்கள் சரிவர விடுபடாமல் இருக்கும்.

● பயிரின் பூக்கும் பருவத்தில், உற்பத்தி பாகங்கள் பாதிப்படைவதால் நெல் மணி சரியாக உருவாகாது. ஆகையால் நெற்கதிரில் பதர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். பொதுவாக பாதிக்கப்பட்ட பயிரின் வீரியமும், வளர்ச்சியும், விளைச்சலும் குறைவாக இருக்கும்.

### கட்டுப்பாடு

● இந்நூற்புழுக்கள் பெரும்பான்மையாக விதை மூலம் பரவுவதால் விதைகளை ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் இரண்டு நாட்களுக்கு நல்ல சூரிய வெயிலில் உலர்த்தி விதைகளில் உள்ள நூற்புழுக்களை அழிப்பது நல்ல பலனைத் தரும்.

● நெல் அறுவடைக்கு பின்னர் தாக்குதலுக்குட்பட்ட வயலில் உள்ள தாள்களை அகற்றி எரிப்பதன் மூலமும் இந்நூற் புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.

● நெல் வேர் முடிச்சு நூற்புழு, நெல் வெண் நுனி இலை நூற்புழு இரண்டையும் குறைந்த செலவில் பயிர் வளர்ச்சி ஊக்கி

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

பாக்டீரியாவான சூடோமோனாஸ் புளூரசன்ஸ் உபயோகித்து உயிரியல் முறையில் கட்டுப்படுத்தலாம்.

● அதன்படி நெல் விதைகளை கிலோ ஒன்றுக்கு 10 கிராம் சூடோமோனாஸ் உடன் விதை நேர்த்தி செய்தும் நாற்றாங் காலில் விதைத்த பின்பு அதே பாக்டீரியத்தை நடவு வயலில் ஏக்கர் ஒன்றுக்கு ஒரு கிலோ என்ற அளவில் தேவையான நீருடன் கலந்தும் நாற்று நட்ட 45, 55, 65-ம் நாட்களில் தெளிப்பதன் மூலமும் இந்நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம் என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா தெரிவித்தார்.

